1972 பிப்ரவரி 1]

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் சந்தனக் கட்டைகள் ஏலம் விடுவதில் கிடைத்த வருமானம் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்போது சந்தனக் கட்டைகள் எந்தெந்த இடங்களில் கிடைத்தன. அப்படி எந்தெந்தக் கடைகளில் கிடைத்த வருமானம் எவ்வளவு என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா? அதே நேரத்தில் சந்தனக் கட்டைகள் அந்தப் பகுதியில் இருந்து கிடைக்கும் கட்டைகள் மிக அதிகமாக திருட்டுப் போகிறது என்று புகார் இங்கே வந்து கொண்டு இருக்கிறது. அந்த மாதிரி திருடுபோன சந்தனக் கட்டைகளின் மதிப்பு அரசாங்கத்திற்கு கிடைத்த வருமானத்தை விட பன் மடங்கு அதிகமாக இருக்கிறது என்று தெரிகிறது. அதைத் தடுக்க அரசு என்னென்ன நடவடிக்கை எடுக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, மாநிலத்தில் பல்வேறு இடங்களில் இருக்கும் சந்தனக் கட்டைகள் மூன்று இடங்களில் விற்கப்படுகின்றன. வட ஆற்காடு, கோவையில் விற்பனையாகிறது. இந்தியாவிலேயே சந்தனக் கட்டை வியாபாரிகள் இருக்கிறார்கள். அந்த சந்தனக் கட்டைகளை அவர்கள் ஏலத்தில் எடுக்கிறார்கள், எந்த விதமான சந்தேகத்துக்கும் இடம் இல்லாமல் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. களவு பற்றி சொல்கிறார். களவு கண்டுபிடிக்கப்பட்டு வழக்குகள் நடைபெற்று வருகின்றன. சில வழக்குகளில் தண்டனை கொடுத்திருக்கிறார்கள்.

விவசாயிகளுக்கு மின் கட்டணம் குறைப்பு

* 255 வினு.—**திரு. பி. மணலி கந்தசாமி :** மாண்புமிகு மின் சாரத்தைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சிறு விவசாயிகளுக்கும், வறட்சியுள்ள பகுதிகளுக்கும் உள்ள மின் கட்டணத்தை ரத்து செய்ய அல்லது குறைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : இப்போது சாதாரண விவசாயிகளுக்கு 12 பைசா என்று ஏற்றிருக்கிறார்கள். சில விவசாயிகள் 12 பைசா தரக்கூடிய நிலைமையில் இல்லை. இதை குறைக்க அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, நேற்றைக்கு டாக்டர் கலைஞர் அவர்கள் இங்கு உரையாற்றியபோது மின்சார கட்டணத்திலே உயர்வு இல்லை, என்று தகுந்த காரணம் சொல்லியிருக்கிறார்கள். இதைக் குறைக்கின்ற உத்தேசம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கமாக பதில் சொல்லியிருக்கிறார். அதனால் நீங்கள் ஒரு வரியிலே பதில் சொன்னால் போதும்.